

# ஸ்ரீ ஸ்ரீ சீரடிசாயிபாபா ஆலயம், மேலவெளி தஞ்சாவூர்

# Sri Sri Shirdi Sai Baba Temple

Melaveli, Thanjavur

(Reg. No. 43 dated 28.01.2002)

**MAINTAINED BY**

## ஸ்ரீ ஸ்ரீ சீரடிசாயிபாபா அறக்கட்டளை

58, M.K. மூப்பனார் ரோடு, தஞ்சாவூர்-613 001. தமிழ்நாடு

போன் : 04362-223122

## Sri Sri Shirdi Sai Baba Trust

58, M.K. Moopanar Road, Thanjavur-613 001, Tamilnadu

Phone : 04362-223122 Website : thanjaisai.com

தஞ்சை ஸ்ரீ ஸ்ரீ சீரடிசாயிபாபா ஆலயத்தினை நிர்வகித்துவரும் ஸ்ரீ சீரடி சாயிபாபா அறக்கட்டளை மூலம் தஞ்சை ஸ்ரீ ஸ்ரீ சீரடி சாயிபாபா ஆலயம் மற்றும் அறக்கட்டளை பற்றிய விவரமும், சீரடி யாத்திரை செல்லும் பக்தர்களுக்கு வழங்கும் குறிப்புகளும்

**Sri. K.B.Swaminathan**
Chairman

**Dr. Guru Govindarajan**
Vice - Chairman

**Er. K. Balasundaram**
Secretary

**Er. R. Sivasankar**
Treasurer

**Sri. P. Murugavel Boopathy**
Joint Secretary


**Sri. T.S. Pichayapillai**
Joint Treasurer

தஞ்சை சீரடி சாயிபாபா அறக்கட்டளையின் வெளியீடு - பகுதி 1, நாள் : 01.01.2013




தஞ்சை சீரடி சாயிபாபா புதிய ஆலயம்


## வழித்தட வரைபடம்



## ஆலய வரைபடம்



ஸ்ரீ சாயிராம் துணை



குரு ப்ரம்மா குரு விஷ்ணு

குரு தேவோ, மகேஸ்வரஹ

குரு ஸாக்ஷாத் பரப்பிரம்மா

தஸ்மை ஸ்ரீ குருவே நமஹ

குருவே ஸர்வ லோகானாம்

பிஷஜே பவ ரோகினாம்

நிதயே ஸர்வ வித்யானாம்

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தயே நமஹ.

## ஷீரடி ஸ்ரீ ஸாயி பாபாவின் பதினொரு உபதேசத் திருமொழிகள்
## நானிருக்க பயமேன்

1. ஷீரடி ஆசிரமத்தை எவன் மிதிக்கிறானோ அவனுடைய துன்பங்கள் ஒரு முடிவடைந்து, சௌகரியத்தை அடைகிறான்.
2. என் ஆசிரமத்தின் படியை மிதித்த மாத்திரத்தில் பெருந்துன்பங்களுக்கு உள்ளானவர்களும், மிகுந்த உற்சாகமும், நன்மையும் அடைவார்கள்.
3. நான் இப்பூத சரீரத்தை விட்டபிறகும் மிகச் சுறு சுறுப்பாகவும், தீவிரமாகவும் எப்பொழுதும் இருப்பேன்.
4. என் சமாதி, என் பக்தர்களுக்கு வேண்டிய ஆசீர்வாதங்களையும், புத்திமதிகளையும் கொடுக்கும்.
5. என் சமாதியிலிருந்தும், நான் ஊக்கத்துடனும், தீவிரமாகவும், சுறுசுறுப்பாகவும், அதிக சக்தியுடனும் லீலைகள் புரிவேன்.
6. என்னுடைய பூத உடலின் சின்னங்கள் என் சமாதியிலிருந்தும் உங்கள் தேவைக்கு பேசிக் கொண்டிருக்கும்.
7. என்னையே தஞ்சமாகச் செய்து கொள்பவனுக்கும் என்னிடம் வருபவனுக்கும், உள்ளன்போடு என்னை கூப்பிட்டவுடன், என்னை நினைத்த மாத்திரத்திலேயே பிரத்யக்ஷமாகிறேன், எந்த ரூபத்திலும், எவ்விடத்திலும் நான் உயிருடன் இருப்பேன்.
8. நீ என்னை அடைந்தால் நான் உன்னை கடாக்ஷிக்கிறேன்.
9. நீ என் மேல் உன் பளுவை சுமத்தினால் நான் நிச்சயமாகத் தாங்குவேன்.
10. நீ என் புத்திமதிக்காகவும், உதவிக்காகவும், என்னைத் தேடினால் அவைகளை உடனே உனக்குக் கொடுப்பேன்.
11. என் பக்தர்களின் வீட்டில் சுகக்ஷேமங்களை கவனிக்கிறேன்.

ஓம் ஸ்ரீ சாயிராம்

## தஞ்சை ஸ்ரீஸ்ரீ சீரடிசாயிபாபா ஆலயத்தினை நிர்வகித்துவரும் ஸ்ரீ சீரடி சாயிபாபா அறக்கட்டளை மூலம் தஞ்சை ஸ்ரீ ஸ்ரீ சீரடி சாயிபாபா ஆலையம் மற்றும் அறக்கட்டளை பற்றிய விபரம்

### (பகுதி -I)

ஸ்ரீ ஸ்ரீ சீரடி சாயிபாபா ஆலயம் தஞ்சாவூர், சீனிவாசபுரம் அருகில் மேலவெளி கிராம எல்லையில் புல எண்கள் 239 மற்றும் 240 ல் அமைந்துள்ளது.

ஸ்ரீ ஸ்ரீ சீரடி சாயிபாபா அவர்கள் அவர்களுடைய சொந்த விருப்பத்தின் அடிப்படையில் தஞ்சாவூரில் தங்குவது என்ற நிலையில் ஸ்ரீ ஸ்ரீ சீரடி சாயிபாபா சிலையும் அபரும் கல்லும் 60 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பெரிய மரப்பெட்டியில் தஞ்சாவூர் ரயில் நிலையத்தில் வந்து அதனை திரு. கே.டி. பாலசுப்ரமணிய அய்யர் தனது மேற்கண்ட இடத்தில் ஒரு பகுதியில் சிறு கோயில் கட்டி 1950 ம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்ததன் பேரில் முதன் முதலாக தஞ்சையில் ஸ்ரீ ஸ்ரீ சீரடி சாயிபாபா ஆலயம் அமைந்து பக்தர்களால் வழிபாடு செய்யப்பட்டு வந்தது.

பின்பு பல்வேறு காலக்கட்டங்களில் தனியார் வசம் இருந்து வந்த ஆலயத்தினை முனைவர் திரு. குரு கோவிந்தராஜன் அவர்கள் சாய் பக்தர்கள் திரு புகழேந்தி, திரு.குருநாதன் மற்றும் இதர சாய் பக்தர்கள் துணைக்கொண்டு தடைபடாமல் பூஜைகள் நடைபெற உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டதன் பேரில் உரிய முறையில் பூஜைகள் நடைபெற்று வந்தது.

ஸ்ரீ ஸ்ரீ சீரடி சாய்பாபா ஆலயத்தினை, அனைத்து மதத்தினரும் ஒற்றுமையுடன் இணைந்து வழிபடவும், இன, மத, மொழி வேறுபாடின்றி அனைவரும் இறை மக்கள் என்ற எண்ணத்தில் வழிபாடுகள் மேற்கொள்ளவும், புதியதொரு ஆலயம் கட்டவும் இதர சமுதாய பணிகள் மேற்கொள்ளவும் தற்போதைய நிர்வாக அறங்காவலர்களான திரு.கே.டி.பாலசுப்ரமணிய அய்யரின் மகன் திரு.கே.பி.சுவாமிநாதன் மற்றும் திரு. குரு.கோவிந்தராஜன் அவர்களை கர்த்தர்களாக கொண்டு 28.01.2002 ல் ஸ்ரீ ஸ்ரீ சீரடி சாயிபாபா அறக்கட்டளை, டிரஸ்ட் சட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. (பதிவு எண் 43 நாள் 28.02.2002) மேலும் ஸ்ரீ ஸ்ரீ சீரடி சாயிபாபா அறக்கட்டளை வருமான வரி சட்டத்தின் கீழ் திருச்சி வருமான வரி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சென்னை சிட்லபாக்கம் பூஜ்ய ஸ்ரீ விபூதி பாபா, பூஜ்ய ஸ்ரீ கரூர் நரசிம்ம பாபா ஆகியவர்கள் பல்வேறு கால கட்டங்களில் இவ்வாலயத்திற்கு வந்து புதியதாக ஆலயம் கட்ட ஆசி வழங்கியதை தொடர்ந்தும், பல்வேறு சாய் பக்தர்களின் கனவு நிறைவேறும் வகையில் அறக்கட்டளையினால் முதல் கட்டமாக புதிய வலம்புரி

விநாயகர் ஆலய குடமுழுக்கு 01.02.2002 ல் நடந்ததை தொடர்ந்து திரு. கே.மு. பாலசுப்ரமணிய அய்யரின் குடும்பத்தார் மற்றும் பலரிடம் நன்கொடை பெறப்பட்டு 17-03.2003 மற்றும் 30.10.2003 தேதிகளில் மொத்தம் 35225 சதுர அடி நிலம் பழைய ஆலயம் மற்றும் சுற்றியுள்ள இடங்களை சுமார் ரூ. 21.68 இலட்சம் செலவில் வாங்கி, புதிய ஆலயம் சுமார் 4200 ச.அடி பரப்பளவில் ரூ. 38.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டு 01.06.2006 ல் குடமுழுக்கு நடைபெற்றது.

மேற்கண்ட பணிகளுக்கு, சென்னை ஸ்ரீ ஸ்ரீ சீரடி சாய் அறக்கட்டளையின் சார்பில் அதன் நிர்வாக அறங்காவலர் திரு. கே.வி. ரமணி அவர்கள் பெருமளவில் நன்கொடை வழங்கி தஞ்சை ஸ்ரீ ஸ்ரீ சீரடி சாய்பாபா ஆலயம் மூலம் சீரடி சாயியின் பெருமையினை தஞ்சை மற்றும் இதர பகுதிகளில் தெரியவர உதவி புரிந்ததோடு ஆலயத்தில் தினந்தோறும் அன்னதானம் நடைபெற, மாதந்தோறும் சென்னை ஸ்ரீ ஸ்ரீ சீரடி சாய் அறக்கட்டளை மூலம் நன்கொடை வழங்கி வருகிறார்கள்.

தஞ்சை ஸ்ரீ ஸ்ரீ சீரடி சாய்பாபா அறக்கட்டளை மூலம் சமுதாய பணியாக, நலிவடைந்தோர்க்கு தினந்தோறும் அன்னதானம் வழங்கும் பணியும், நலிவடைந்த முதியோருக்கு மருத்துவ வசதியும், சென்னை திரு. ஜெக்தப் அவர்கள் மூலம் இலவச நிவாரண முகாமும், வேலூர் சாயி மாணிக்கம் பாபா அவர்கள் மூலம் பக்தர்களுக்கு விபூதி பிரசாதம் வழங்கும் முகாமும், டாக்டர். வெங்கட சுப்பிரமணியன் குழுவினரால் இலவசஆயுர்வேத முகாமும், லயன்ஸ் கிளப் மூலம் இலவச கண் சிகிச்சை முகாமும் மற்றும் இதர நிகழ்ச்சிகளும் நடைபெற்றுள்ளது. மேற்கண்ட நிகழ்ச்சிகளில் பெரும்பாலோர் கலந்துகொண்டு பயன் பெற்றுள்ளார்கள்.

மேலும் எதிர்காலத்தில் இலவச மருத்துவ முகாம், நலிவடைந்த பள்ளி குழந்தைகளுக்கு பள்ளி செலவிற்கு உதவி செய்தல், ஸ்ரீ ஸ்ரீ சீரடி சாயி பாபாவின் மகிமையினை எல்லோரும் அறியும் வகையில் உரிய பணிகள் மேற்கொள்ளுதல் ஆகியவைகள் நடைபெற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அனைவரும் இறை மக்கள் என்ற எண்ணத்தில் வழிபட உரிய சூழ்நிலைகள் இவ்வாலயத்தில் ஏற்படுத்தப் பட்டுள்ளதால், வெளியூர்களில் இருந்து பல பக்தர்கள் ஸ்ரீ ஸ்ரீ சீரடி சாயிபாபாவினை தரிசனம் செய்து வருவதுடன், வியாழன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பெருமளவில் பக்தர்கள் இவ்வாலயத்திற்கு வந்து வழிபட்டு பயன்பெற்று வருகிறார்கள்.

ஸ்ரீ ஸ்ரீ சீரடி சாயிபாபா அறக்கட்டளையின் அடுத்த முயற்சியாக, அன்னதான கட்டிடம் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, பக்தர்கள் மற்றும் பெங்களூர் திரு. முரளி வெங்கடேசன் அவர்களின் பெரும் நன்கொடையுடன், ரூ. 6.50 இலட்சம் செலவில் 1500 ச. அடி பரப்பளவில் அன்னதானக் கூடம் கட்டப்பட்டு 18.06.2007

அன்று திறக்கப்பட்டு தினந்தோறும் இரண்டு வேளையும் அன்னதானம் நடைபெற்று வருகிறது.

எதிர்காலத்தில், ஆலயத்திற்கு தேவைப்படும் கூடுதல் இடத்தினை வாங்குதல், ஆலயத்தினை சுற்றி நடைபாதை அமைத்தல், குடிநீர் வசதி, மேலாளர் மற்றும் அர்ச்சகர் தங்கும் விடுதி, பாபா சிம்மாசனம் மற்றும் திருவாச்சிக்கு வெள்ளி மற்றும் தங்க கவசம் அமைக்கும் பணி, சமையலறை, அன்னதான கூடுதல் கட்டிடம் ஆகிய பணிகளுக்காக உத்தேச செலவினம் ரூ. 75.00 இலட்சம் ஆகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்கு பக்தர்களிடம் இருந்து நன்கொடை வரவேற்கப்படுகிறது.

ஸ்ரீ ஸ்ரீ சீரடி சாய்பாபா ஆலயத்தில் தினந்தோறும் சீரடியில் நடைபெறுவது போல் நான்கு வேளை ஆரத்தி நடைபெற்று வருகிறது. காலை 6.00 மணிக்கு காலை ஆரத்தியும், நண்பகல் 12.00 மணிக்கு நண்பகல் ஆரத்தியும், மாலை 6.00 மணிக்கு மாலை ஆரத்தியும், இரவு 8.00 இரவு ஆரத்தியும் நடைபெற்று வருகிறது. ஆலயம் பக்தர்களின் தரிசனத்திற்காக காலை 6.00 மணி முதல் பகல் 1.00 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையிலும் திறந்து இருக்கும். ஒவ்வொரு ஆண்டும் ஸ்ரீ ராம நவமி உற்சவம், குருபூர்ணிமா உற்சவம், பாபா மஹா சமாதியான புண்ணிய திதி உற்சவம் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. ஆலய பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி பணிகள் யாவும் ஸ்ரீ ஸ்ரீ சீரடி சாய்பாபா அறக்கட்டளை மூலம் அதன் நிர்வாக அறங்காவலர் மற்றும் அறங்காவலர்கள் மேற்பார்வையில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. மேலும் வருடாவருடம், வருஷாபிஷேகம் மிகவும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

தஞ்சை சீரடி சாய்பாபா ஆலயத்தில் உள்ள கருணாமூர்த்தியான சாய்பாபா பல அற்புதங்களை இங்கு நிகழ்த்தி வருகிறார். பல பக்தர்கள் இங்கு உள்ள துனியிலிருந்து உதி பெற்று உடல் வியாதிகள் நிவாரணம் பெற்றதனை தெரிவித்துள்ளார்கள். பல பக்தர்களுக்கு இவ்வாலயத்திற்கு வந்து பாபாவினை தரிசனம் செய்து வேண்டிக்கொண்டதற்கு இணங்க வேலை கிடைத்துள்ளதாகவும், தங்கள் பிரச்சனைக்கு தீர்வு கிடைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள். மேலும் இவ்வாலயத்தில் சென்னை உயர்திரு. ஜெகதப் மற்றும் பாபா சாய்மாணிக்கம் அவர்களின் மூலம் நடைபெற்ற இலவச பிரார்த்தனை முகாமில் ஒரு பக்தருக்கு அன்று பாபாவிற்கு அணிவிக்கப்பட்ட அதே ஆடையுடன் திரு. ஜெகட்ப்ஜி கையில் பாபா உருவம் தெரிந்துள்ளதனை எழுத்து மூலம் பதிவு செய்துள்ளார்கள். இவ்வாலயத்தில் நடைபெற்ற உயர்திரு. பாபா சாய்மாணிக்கம், வேலூர் அவர்களின் 11.01.2009 ஆம் தேதி இலவச பிரார்த்தனை முகாமில் பல பக்தர்களுக்கு பாபா சாய்மாணிக்கம்

கண்களில் பாபா தெரிந்துள்ளதனை தெரிவித்துள்ளார்கள். மேலும் அன்று மதியம் நடைபெற்ற தமிழ் ஆரத்தியின் பொழுது சிவா ரூபம் கொண்ட பாபா நடனமாடியதனை பாபா சாமிமாணிக்கம் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். எனவே, அனேக பக்தர்களுக்கு ஆன்மீக, இலௌகீக அற்புதங்கள் நடந்து வரும் இவ்வாலயத்திற்கு அனைவரும் வருகை புரிந்து ஸ்ரீ சாயிநாதன் அருள்பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். மேலும் இவ்வாலய வளர்ச்சி பணிகள் மற்றும் தினந்தோறும் நடைபெறும் அன்னதானத்திற்கு நன்கொடை வழங்க வேண்டப்படுகிறார்கள். பக்தர்களின் தரிசனத்திற்கு எந்த ஒரு இடையூறும் நிகழா வண்ணம் இருக்க ஏதுவாக ஆலய வளாகத்தில் அனைத்து நிகழ்ச்சிகளும் கண்காணிப்பு கேமரா மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும் அன்னதான கட்டிடத்தில் உள்ள அனைத்து பாத்திரங்களும் தினந்தோறும் சூரிய சக்தியில் கிடைக்கும் வெந்நீரைக்கொண்டு சுத்தம் செய்யப்பட்டு சுகாதார முறையில் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்படுகிறது.

குறிப்பு : ஆலய சிறப்பு அபிஷேகம், தினசரி பூஜை, அன்னதானம், ஆலய மராமத்து மற்றும் வளர்ச்சிப்பணிகளுக்கு நன்கொடை வழங்க விரும்புவோர் தொகையினை நேரில் வழங்கி உரிய ரசீது பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். காசோலை மற்றும் இதர முறையில் நன்கொடை செலுத்த விரும்புவோர் SHRI SHRI SHRIDI SAIBABA TRUST, THANJAVUR என்ற பெயரில் எடுத்து, திரு. கே. பாலசுந்தரம், செயலாளர்/ அறங்காவலர், ஸ்ரீ ஸ்ரீ சீரடி சாயிபாபா அறக்கட்டளை, மேலவெளி, களிமேடு அஞ்சல், தஞ்சாவூர் 613 002. என்ற விலாசத்திற்கு அனுப்ப கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். உரிய ரசீது பாபாவின் உதி பிரசாதத்துடன் அஞ்சல் மூலம் அனுப்பப்படும் மேலும் வங்கியின் நேரிடையில் வங்கி மூலம் நன்கொடை செலுத்த விரும்புவோர் கீழ்கண்ட முகவரிக்கு செலுத்த கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**SRI SRI SHRIDI SAIBABA TRUST, THANJAVUR.**

**Account No.: Canara Bank - 3623101001416**

**Branch - Melaveli - DP Code : 3623**

**IFSC : CNRB 0003623**

ஆலய தொலைபேசி எண்: 04362-223122

ஆலய முகவரி :

ஸ்ரீ ஸ்ரீ சீரடி சாயிபாபா ஆலயம்

மேல வெளி கிராமம், களிமேடு அஞ்சல், தஞ்சாவூர் – 613 002

**SRI SRI SHRDI SAIBABA TEMPLE**

Melaveli Village, Kalimodu Post, Thanjavur - 613 002

இணையதள முகவரி

www.thanjaisai.com

E-mail : thanjaishridisai@gmail.com

ஆலய தொலைபேசி எண் : 04362 – 223122

தொடர்புக்கு : (Contact Person)

K. Balasundaram (Secretary / Trestoe)

Cell : 9443722102

R. Siva Sankar (Treasurer / Trustee)

Cell : 9994456030

பல பக்தர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, இவ்வாலயத்தின் மூலம் பக்தர்களுக்கு ஏற்படும் அனுபவங்களை விரைவில், குறிப்பாக வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. பக்தர்கள் தங்களது அனுபவங்களை எழுத்து மூலம் அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டப்படுகிறார்கள். பெயர் வெளியிட விரும்பாத பக்தர்கள் பெயர்களை வெளியிட வேண்டாம் என்று தெரிவித்தால் நிகழ்வுகள் மட்டும் வெளியிடப்படும். தினந்தோறும் பக்தர்களுக்கு ஏற்படும் அனுபவம் மற்றும் நிறை குறைகளை அலுவலகத்தில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம் அல்லது தனியாக வைக்கப்பட்டுள்ள ஆலோசனைப் பெட்டியில் எழுத்து மூலம் எழுதி சேர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**ஸ்ரீ ஷீரடி சாயி பாபா மூல மந்திரம்**

ஓம் ஸாயி ஸ்ரீ ஸாயி ஜெய ஜெய ஸாயி

**ஸ்ரீ ஷீரடி சாயி பாபா காயத்ரி மந்திரம்**

ஓம் ஷீர்டி வாஸாய வித்மஹே

ஸச்சிதானந்தாய தீமஹி

தன்னோ ஸாயி ப்ரசோதயாத்.



SAI BABA BOOK - FORM - 3


சீரடி சாயிபாபா ஆலயம்